# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 139/2024 |
| P.W. | : | 2 |
| Name | : | திரு. ரவிக்குமார் |
| Father Name | : | திரு. குப்புசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.02.2026

எதிரி காணொளி காட்சி மூலமாக ஆஜர் படுத்தப்பட்டார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் காளியூர் டிஜிபுதூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாமா. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு டிசம்பர் 02ம் தேதி 2009 இரவு 10.00 மணியளவில் டிவி பார்த்துக்கொண்டிருந்தேன். அ.சா.1 வெளியே மாட்டு சாலையில் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தார். வீட்டின் உள்ளே நானும், தாத்தா, பாட்டி இருந்தோம். இரவு 12.45 மணியளவில் வெளியே இருந்து கூச்சல் சப்தம் கேட்டது.

மாமா தன்னை யாரோ பிடித்துவிட்டதாகவும், கொள்ளையடிக்க வந்திருப்பதாகவும் சொன்னார். சன்னல் கண்ணாடிகளை உடைத்தார்கள். கதவை திறக்க சொல்லியும் இல்லை என்றால் அவரை கொன்றுவிடுவதாக சொன்னார்கள். நான் கதவை திறந்தேன். அரிவாளுடன் என்னை வெட்ட வந்தார்கள். அவர்கள் குள்ளா அணிந்திருந்தார்கள் என் பாட்டி என்னை பிடித்துக்கொண்டார். என் மாமாவை அதற்கு முன்பாகவே கையை லுங்கியால் பின்னால் கட்டி வாழைத்தோட்டத்திற்கு இழுத்து சென்றுவிட்டார்கள். என்னையும் லுங்கியால் பின்னால் கட்டி வாழைத்தோட்டத்திற்கு இழுத்து சென்றுவிட்டார்கள். என் மாமாவை அவர்கள் அடித்தார்கள் என்னையும் கழுத்தில் கத்தியை வைத்து அடித்தார்கள். வீட்டில் என்ன பணம் நகை உள்ளதா என்று மிரட்டினார்கள். 3 அல்லது 4 நபர்கள் வாழைத்தோட்டத்தில் இருந்து வந்தார்கள். தாலிக்கொடி எங்கே என்று மிரட்டினார்கள். அதற்கு மாமா பேங்கில் உள்ளதாக சொன்னார். வீட்டிற்குள் சென்று பொருட்களை கலைத்துபோட்டுவிட்டு, பாட்டியிடம் இருந்து கம்மல், கொஞ்சம் பணம், டிவிடி பிளேயர், வெங்கல தட்டு ஆகியவற்றை எடுத்துக்கொண்டார்கள். எங்கள் இருவரையும் கிணற்றில் தள்ளிவிடுவதாக இழுத்துச்சென்றார்கள். நாங்கள் கேட்டுக்கொண்டதால் எங்கள் இருவரையும், பாட்டி தாத்தாவையும் வீட்டிற்குள் வைத்து அடைத்து வெளியே சாத்திவிட்டார்கள். வீடுகள் தூரமாக இருந்ததால் நாங்கள் சப்தம் போட்டும் யாரும் வரவில்லை. காலை 6.00 மணி சுமாருக்கு எங்களது

சப்தம் கேட்டு பழனிச்சாமி வந்து கதவை திறந்துவிட்டார். இதுகுறித்து காவல் நிலையம் சென்று தகவல் சொன்னோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.**